## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING OVERALL EXTENT OF 2.16.5 HA FOR THIRU.S.ABDUL JABBAR ROUGH STONE & GRAVEL QUARRY AT S.F.NO.44/9(P), 45(P), 46/1 & 47/3(P)OF KURUNALLIPALAYAM VILLAGE, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT ON 05.08.2024 AT 11:00 AM AT M/S. KAMATCHI THIRUMANA MANDAPAM (SK MAHAL), KARUR VYSYA BANK BACKSIDE, VADASITHUR, COIMBATORE.**

Present:

| | | | |
|---|---|---|---|
| 1 | Thirumathi. R.Jeeva | : | **Special District Revenue Officer (Land Acquisition & Management Unit) Coimbatore District** |
| 2 | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Thiru.S.Senthil Kumar | : | **Assistant Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru.S.Abdul Jabbar | | The Proprietor, Thiru.S.Abdul Jabbar Rough Stone & Gravel Quarry |
| 5. | Thiru.M.Shaik Nawas | : | EIA Consultant M/s. GEO Exploration and Mining Solutions, Salem. |
| 6. | Public | : | 138 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the **District Revenue Officer** Coimbatore, and all general public who are attending the public hearing for the Proposed Rough Stone And Gravel Quarry Covering overall Extent Of 2.16.5 Ha for Thiru.S.Abdul Jabbar Rough Stone & Gravel Quarry At S.F.No.44/9(P), 45(P), 46/1 & 47/3(P)Of Kurunallipalayam Village, Kinathukadavu Taluk, Coimbatore District.

It is required to obtain Environmental Clearance (EC) mandatorily from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India as per EIA Notification, 2006. for certain projects including quarry activity after conducting Public Hearing. The public hearing minutes shall be submitted to State Environmental Impact Assessment Authority (SEIAA). He added that the press release informing the conducting of Public Hearing was published in **"Dinathanthi"** and **"The New Indian Express"** dated **29.06.2024** and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at selected Government offices and informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also added that the views, suggestions of the public will be recorded through videography / Audio and the same will be submitted to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

He again welcomed the Chairperson Special District Revenue Officer, General public and representative of Agriculture Association etc., and he also requested the project consultant would make a detailed presentation about the proposed project, impact on pollution and the mitigation measures of the Industry.

District Revenue Officer, Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation and requested the public to express their views and raise obtain necessary clarifications for their doubts. Main aim of this meeting is to register the public views related to Environment.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public's are detailed below:

**1. AlagunachiMuthu, Vadachithur:**

Hello, good morning. If this stone quarry is allowed to operate here, around 150 people get direct and indirect employment opportunities. All small shops like Tea Stall, Automobiles, Mechanic shops are functioning based on the automobiles operated for this quarry, so I request the district revenue officer and environmental engineer to allow this quarry to continue to operate. Basic needs like food, cloth and house will be available to us when we protect nature. Once again, I request permission to this Quarry.

**2.Kumaraswamy, Vadachithur**

I welcome my relatives who are attending this meeting. My name is Ponmalai Kumaraswamy. I belong to Vadasithur Village. Permission maybe granted after getting opinion of all gathered here. I have respected the quarry, as I am in public life. There is no defect. They have planted trees and maintaining them in and around the quarry. If you have such a mines, you can freely give permission. He spent large amount to the public and he is taking active part in renovation/other works carried out in Government Elementary Schools, High School and Public Health Centres. Hence, permission should be granted to the quarry. There is no hinderance to public. He is serving to public. Quarry is not functioning on commercial basis. He is doing business in proper way by remitting Income Tax. The Quarry must be continued. It gives

indirect employment. There is no objection to issue license to this quarry.

**3) M. Sundararaj, Karacherry, Arashampalayam Panchayat President.**

Good morning everyone. I would like to take this opportunity to thank the District Revenue Officer and the District Environmental Engineer who are here. This quarry has many advantages in this area. Panchayat gets revenue which is used for road development works. I studied in Vadachithur school only. There is no fund for expansion works. Due to this quarry, local, other public and drivers counting about 200 families are benefited. Therefore, I would like to inform you that we have no objection to grant permission to this quarry.

**4) K.Jagadeeswaran, Karacherry**

Hello everyone, I am BE Mechanical Engineering. I am having transport business with 4 trucks. There are so many issues. That is, there is no material available for transporting. There is a shortage of construction materials all over Coimbatore. So, if many quarries come, we will have some support. Due to non-availability of material here, we are in the position to buy the same from farther places. Cost is also high. So please allow me to help people here. It is very helpful if license is granted.

**5. Venkatesh, Karacherry**

Hello everyone. I have studied BE Civil Engineering. I am caring our business with 2 trucks since, I don't have a proper job. For that also, I have not get enough material. Since, material is not available here, I have to get it from Kinathukkadavu, Pollachi, etc., So approval is issued quickly, it will be very helpful for us. Thank you.

**6. Somasundaram, Karacherry.**

Good Evening. There is no harm if permission will be given to this quarry. So, issue License.

**7. Gunasekaran, Kurunellipalayam**

I am living in the farm near the quarry. Quarry is safe and functioning well without any problem. I am also working there. Also 50-60 people get employment through this. So permission can be given for quarrying. There are no issues.

**8. Moorthy, Panchayat Ex-President,Kurunellipalayam**

Hello, he has helped a lot to this village. He has given donation of 10 lakhs to build a temple in our Village. So allow it.

**9. Mohammad Ismail, Vadachithur.**

You can generously grant permission to this Quarry and many people are directly and indirectly benefited by this. It will also help the panchayat to carry out welfare programs which can be implemented through their fund. So I humbly request you to kindly grant permission.

**10. Vijay, Chettypalayam**

Hello, I am driver. If you allow this stone quarry it will be a livelihood for many people like me. Permission shall be granted. Thank you very much.

**11. Sivaprakash, (Tamil Farmers Environmental Protection Association).**

Hello I am a member in Tamil Nadu Farmers Protection Association, Kinathukadavu Circle. I am here to submit petition regarding Abdul Jabbar Stone Quarry, Kurunelipalayam Village functions against government regulations. As per Minor Minerals Rules 1956 section 36 (1) of the Act, no houses to be located nearer to the quarry. More than 10 approved houses are within 300m radius and quarry is operated by destroying Government Roads. I am handling over objection petition on behalf of Tamil Nadu Farmers Protection Association not to grant permission for this Stone Quarrying in a total area of 2.16.50 ha , (5.40.0 acres) in S.F.No. 44/9, 45, 46/1 and 47/3 due to various illegal activities. Farmers are against this quarry.

**12. Kalaivani, Panchayat President, Vadasithur**

Good Morning to all. If this Quarry is commissioned it will increase employment to Vadasithur Panchayat and its surroundings. So, License may be issued to this Quarry. Thank You.

**13) Shanmugam, Assistant Head Professor (Retd), Thegani.**

I would like to say good morning to the District Revenue Officer who is presiding over this hearing and the District Environment Engineer who is conducting the meeting and the public who have come to this hearing. In my first opinion Mr. Abdul Jabbar stone quarry will not cause any environmental pollution in this area and the location is not harm. Secondly, when this stone quarry is established, it will increase employment to workers of 100 numbers directly and 500 indirectly living in 18 villages. He involves in community development through his work also. He is able to do a lot for Vadachithur, Kurunellipalayam and 18 other villages. Therefore, he can contribute to the improvement of the socio-economic condition to all the villages in this area. Revenue from quarry is directly used for the public. Since no industries in this area, he is investing in this natural mineral resource and running it as a business. This will create job opportunities and this enhances economy of public hence license may be issued to this quarry.

14) **Thangaraj President, Manrampalayam.**

Hello everyone. If license is issued, 15 families from this village will get employment. Similarly, he fullfils the requirements of Manrampalayam panchayat. So I request permission to this stone quarrying. Thank you.

**15) Vijaysankar , Chairman, Kurunellipalayam.**

Hello This quarry is located in our village. We are not affected by the operation of this quarry. Further, as this quarry is in operation, our panchayat will get various development works. Also the people of our village get job opportunities. So we no objection to grant license this quarry.

**16) Devaraj, Former President-Panchayat Council, Vadachithur.**

Good morning everyone. I am President of the Government Higher Secondary School Parent Teacher Association and also in various organisation. Mr. Abdul Jabbar is doing this business he has carried lot of works in surrounding villages through CSR funds. Moreover, he has built drinking water building in the Government Higher Secondary School and also carried out repair works in water pipe line and electrical works of 5 lakhs. He has leveled the low lying area at a cost of 13 lakhs and helped to construct primary health centre at Vadasithur and thus fulfilled 50 years dream. Similarly, I am a temple trustee . He has donated Rs. 2 lakhs to the ancient Karivaradharaja Perumal for kumbabhishekam. He has also spent 5 lakhs rupees to repair roads to the above temple. Also, during the Corona period, he has done a lot of help to those working in the agricultural farms here and those resides nearby. Will therefore, I would like to inform that permission may be granted to set up his stone quarry.

**17) Rasu, Mottaikadu, Kurunellipalayam.**

I am Mottaikadu Rasu, Kurunellippayam. My farm is next to the quarry. No problem here. Permission may be granted.

**18) Ilango, Bakery Owner.**

My name is Ilango. We have a bakery and sweets shop here. I have been associated with this quarry almost 40 years and the stone quarries are functioning here for a long time. Quarry provides employment to many public. The poor people mostly rely on M-sand whenever the river sand is not available. Hence they need quarries. Due to non-availability of river sand, many masions and women workers, loss their job when the M-sand is not available. So quarries are essential. Hence this quarry is very much needed. On behalf of my people and on my own behalf, I would like to say thank you.

**19) Saravanaselvan, Kumaran Construction, Malumichampatti.**

I am a contractor for road construction. In this area, there is a shortage of construction materials like jally, gravel, M-Sand and wet mix. M-sand needed for road construction. So we have to bring it from far away. It would be very convenient if it is available readily side. Costs are high as they are brought from far away. If quarry is permitted it will be Very helpful for road contractors and all others. So I request the authorities to allow this quarry to operate. Thank you very much.

**20) Thambirajan**

Hello everyone, I am working as the secretary of DMK Vadachithur. The P-sand and M-sand manufactured by Mr. Abdul Jabbar is being sold in ten village Panchayats including our village. Hence quarry is necessary to this region. Therefore, I request you to grant permission to this quarry.

**21) Amarjith Kumar, Bihar.**

We have 10 people working here. I request you to grant quarry permission.

**22) Rasheeth.**

Hello everyone here. About 10-15 drivers are working in this quarry. If permission is granted, our livelihood will be better.

**23) Vijay, Thegani.**

My name is Vijay. My Hometown is Mayiladuthurai. We are living in Thegani village. I am working as an operator in quarry. We have been working here for almost 8 years. It will be very helpful for all of us if permission is granted.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South registered vote of thanks to all.

Number of Petitions received – 6 Nos.

District Environmental Engineer
**Tamil Nadu Pollution Control Board**
**Coimbatore South**

Special District Revenue Officer,
**Land Acquisition & Management Unit**
**Coimbatore District**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், குருநல்லிபாளையம் கிராமம், க.ச.எண். 44/9(P), 45(P), 46/1 & 47/3(P)–ல் 2.16.5 ஹெக்டெர்ஸ் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. S. அப்துல் ஜாபர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி, குருநல்லிபாளையம் கிராமம், கிணத்துக்கடவு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். கோயம்புத்தூர் மாவட்டம், வடசித்தூர் கரூர் வைசியா பாங்க் பின்புறம் அமைந்துள்ள தி/ள். காமாட்சி திருமண மண்டபம் (SK Mahal) 05.08.2024 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.ஜீவா | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் எடுப்பு மற்றும் மேலாண்மை அலகு, கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr. R. சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.S.செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு.S.அப்துல் ஜபார் | | உரிமையாளர் திரு.S.அப்துல் ஜாபர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி, |

| | | | |
|---|---|---|---|
| 5. | திரு. M. ஷேக் நவாஸ் | : | திட்ட ஆலோசகர்,<br>ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு. |
| 6. | பொதுமக்கள் | : | 138 எண்ணிக்கை |

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், குருநல்லிபாளையம் கிராமம், க.ச.எண். 44/9(P), 45(P), 46/1 & 47/3(P)–ல் 2.16.5 ஹெக்டெர்ஸ் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.S.அப்துல் ஜாபர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தினை தலைமையேற்று நடத்த உள்ள தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொது மக்களையும் மற்றும் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி உரிமையாளர் அவர்களையும், சுற்றுச்சுசூழல் ஆர்வலர்களையும் மற்றும் விவசாயிகளையும் கோவை மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006–ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும்.

ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "**தினத்தந்தி**" மற்றும் "**தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்**" ஆகிய நாளிதழ்களில் 29.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக திட்ட ஆலோசகர் அவர்கள் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய கூறுகளை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் பதிவு செய்யலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்புரேசன்

அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர்.

**1.அழகுநாச்சிமுத்து, வடசித்தூர்.**

காலை வணக்கம். இந்த கல்குவாரியை இங்கு தொடர்ந்து செயல்பட அனுமதித்தால், வடசித்தூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள பல்வேறு மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் 150 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும். சிற்றுண்டி, ஆட்டோமொபைல், மெக்கானிக்கடைகள் அனைத்தும் இந்த குவாரிக்கு வரும் வாகனங்களை அடிப்படையாக கொண்டு செயல்படுவதால், இந்த குவாரியை

தொடர்ந்து இயங்க அனுமதிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை கேட்டுக்கொள்கிறேன். உணவு, உடை இருப்பிடம் ஆகியவை மனிதனின் அத்தியவாசிய தேவை. இவற்றிற்கு நாமும் இயற்கையோடு சார்ந்து செயல்படவேண்டும். எனவே, குவாரியை தொடர்ந்து செயல்பட அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

2. குமாரசாமி, வடசித்தூர்.

வணக்கம் இங்கு வருகை புரிந்திருக்கும் எனது உறவினர்கள்அனைவருக்கும் காலை வணக்கம், எனது பெயர் பொன்மலை குமாரசாமி மற்றும் நான் வடசித்தூர் பகுதியை சேர்ந்தவன். இந்த ஆலோசனைகூட்டத்திற்கு வருகை தந்த அனைத்து உறவினர்களுக்கும் வணக்கங்கள் மற்றும் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குவது குறித்து அனைவரின் கருத்துக்களையும் கேட்டு, இந்த கல்குவாரிக்கு நீங்கள் தாராளமாக அனுமதி வழங்கலாம். நான் பொது வாழ்க்கையில் இருப்பதால் அந்த குவாரியை அடிக்கடி சென்று அங்கு ஆய்வு செய்துளளோம். குறைசொல்லும் சூழ்நிலைகள் இல்லை. அந்த இடத்தில் கல்குவாரி செயல்படுகிறது என்று தெரியாத வகையில் அப்பகுதியைச் சுற்றி மரங்களை நட்டு, பராமரித்துவருகிறார். மேலும் அந்த கல்குவாரின் வருமானத்தில் பெரும் தொகையை பொதுமக்கள் மற்றும் பொது நலனுக்காக செலவிடுகிறார். நமது அரசு உயர்நிலைப்பள்ளி, அரசுத் தொடக்கப்பள்ளி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என எல்லாவாற்றிற்கும் அவரது பங்களிப்பு இருந்து வருகின்றன. இக்கிராமத்தில் அந்த மருத்துவமனை அமைய கடுமையாக உழைத்திருக்கிறார். குறைந்தபட்சம் அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்.

நிச்சயமாக சுரங்கம் எந்த தவறும் இல்லாமல் இயங்கி வருகிறது. மக்களுக்கும். எந்தவிதமான இடையூறு இல்லாத சுரங்கம் திரு.அப்துல்ஜாபரின் சுரங்கம். இவ்வளவு மனிதாபிமானமுள்ள, மக்களுக்கு நன்றாக சேவை செய்பவர் சிறந்த மனிதாபிமானி. வணிக அடிப்பயையில் சுரங்கம் செயல்படவில்லை. அவர் தனது தொழிலை நன்றாக செய்கிறார், வருமான வரியை சரியாக செலுத்துகிறார். இப்படி ஒரு சுரங்கத்திருக்கு நீங்கள் தாராளமாக அனுமதி வழங்கலாம். குறிப்பாக இங்கு குவாரி தொடர வேண்டும். குவாரியால் மறைமுகமாக பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அந்த சுரங்கத்திற்கு அனுமதி வழங்குவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி மற்றும் வணக்கம்.

**3. M.சுந்தரராஜ், காரச்சேரி, அரசம்பாளையம் ஊராட்சி தலைவர்.**

அனைவருக்கும் காலை வணக்கம். இங்கிருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் அம்மா அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஐயாஅவர்களுக்கும்இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த குவாரியால் இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு பல நன்மைகள் உள்ளது. இந்த பஞ்சாயத்துக்கு வருமானம் வருகிறது. அந்த வருமானத்தின் மூலம் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள நான் வடசித்தூர் பள்ளியில் படித்தேன். போதுமான வருமானம் இல்லாததால் விரிவாக்க பணி செய்து கொடுக்க முடியவில்லை. குவாரி வருமானம் மூலம் செயல்படுத்தப்பட்டது. மேலும், இந்த குவாரியால் உள்ளுர் மற்றும் வெளியூர் மக்கள், இங்குள்ள ஓட்டுனர்கள் என, 200 குடும்பத்தினர் பயன் பெறுகின்றனர்.

எனவே, இந்த குவாரிக்கு அனுமதி வழங்க எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**4. K.ஜெகதீஸ்வரன், காரச்சேரி.**

அனைவருக்கும் வணக்கம், நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் இளநிலை பட்டாதாரியாக இருக்கிறேன். நான் 4 லாரிகள் மூலம் போக்குவரத்து வியாபாரம் செய்து வருகிறேன். அதில் நிறைய சிக்கல்கள் உள்ளன. அதாவது எதற்கும் பொருள்கள் கிடைக்கவில்லை. கோயம்புத்தூர் முழுவதும் கட்டுமானப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, இதே போல் பல குவாரிகள் வந்தால், எங்களுக்கு ஓரளவு ஆதரவு இருக்கும். இங்கு கிடைக்காததால், தொலை தூரத்தில் இருந்து பொருள்கள் வாங்கும் நிலை அதிக பொருளாதாரச் செலவு. குவாரிக்கு அனுமதி அளித்தால் இங்குள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**5. வெங்கடேஷ், காரச்சேரி.**

அனைவருக்கும் வணக்கம். நான் BE சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். சரியான வேலை இல்லாததால் 2 லாரிகள் மூலம் தொழில் நடத்தி வருகிறேன். தற்போது அதற்கும் தேவையான சுமை கிடைப்பதில்லை. இங்கு கிடைக்காததால், கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி போன்ற பகுதிகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால், விரைவாக ஒப்புதல் அளித்தால் எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். நன்றி.

**6. சோமசுந்தரம், காரச்சேரி.**

வணக்கம் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே அனுமதி வழங்கலாம்.

**7. குணசேகரன், குருநெல்லிபாளையம்.**

நான் குவாரிக்கு அருகில் உள்ள தோட்டத்தில் இருக்கிறேன். குவாரி பாதுகாப்பாக மற்றும் எந்த பிரச்சனையும் இல்லாமல் சிறப்பாக செயல்படுகிறது. மேலும் அங்கு தான் நான் வேலை செய்கிறேன். மேலும் இதன் மூலம் 50–60 பேர் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். எனவே குவாரிக்கு அனுமதி வழங்கலாம். எந்த பாதிப்பும் இல்லை.

**8. மூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், குருநெல்லிபாளையம்.**

வணக்கம், அவர் இந்த கிராமத்திற்கு நிறைய உதவி செய்துள்ளார். எங்கள் ஊரில் கோயில்கட்ட 10 லட்சம் நிதியுதவி அளித்துள்ளார். எனவே அனுமதியுங்கள்.

**9. முஹம்மது இஸ்மாயில், வடசித்தூர்.**

இந்த கல் குவாரிக்கு நீங்கள் தாராளமாக அனுமதி வழங்கலாம். இதனால் பலர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைகின்றனர். பஞ்சாயத்துக்கு வருமானம் ஈட்டி நலத்திட்டங்களை மேற்கொள்ளவும் இது உதவும். எனவே தயவுசெய்து அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**10. விஜய், செட்டிபாளையம்.**

வணக்கம் என் பெயர் விஜய் நான் டிரைவர் பணி செய்து கொண்டு உள்ளேன். இந்த கல் குவாரியை அனுமதித்தால் எங்களை போன்ற பலருக்கு வாழ்வாதாரமாக இருக்கும். தாராளமாக அனுமதி கொடுங்கள். மிக்க நன்றி.

**11. சிவபிரகாஷ், (தமிழ்நாடு விவசாயிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்).**

வணக்கம். நான் சிவபிரகாஷ். கிணத்துக்கடவு தமிழ்நாடு விவசாயிகள்சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கத்தில் உள்ளேன். கிணத்துக்கடவு வட்டம், குருநெல்லிபாளையம் கிராமம், அப்துல்ஜப்பார் கல் குவாரி பற்றி கலெக்டரிடம் மனு கொடுக்க வந்துள்ளேன், அரசு விதிமுறைகள் மற்றும் சிறுகனிம விதிகள் 1959 சட்டத்தின்பிரிவு 36(1)–ன் படி வீடுகள் குவாரிக்கு அருகில் இருக்கக்கூடாது. ஆனால், 300 மீட்டர் சுற்றளவில் 10–க்கும்மேற்பட்ட ஒப்புதல் பெற்ற வீடுகள் உள்ளது. அரசுக்குச் சொந்தமான சாலையை அழித்து செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் சட்ட சங்கம் சார்பில் புல எண்: 44/9 பகுதி, 45 பகுதி, 46/1 மற்றும்47/3. சுமார் 5.40.0 ஏக்கர் (2.615 ஹெக்டேர் ) பரப்பளவில் அமைய உள்ள கல் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என ஆட்சேபனை மனு அளிக்கிறோம். மேலும், தமிழக விவசாயிகள் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

**12. கலைவாணி, ஊராட்சிமன்ற தலைவர் வடசித்தூர்.**

அனைவருக்கும் வணக்கம். இந்த கல் குவாரி வருவதால் வடசித்தூர் ஊராட்சி மற்றும் சுற்று வட்டார பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். எனவே கல் குவாரி சுரங்கம் அமைக்க அனுமதி வழுங்கலாம். ஆட்சேபனை இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி மற்றும் வணக்கம்.

**13. சண்முகம், உதவி தலைமை ஆசிரியர் (ஓய்வு), தேகானி.**

இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும் முன்னிலை வகிக்கும் சுற்றுச்சூழல் பொறியாளருக்கும், இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.அப்துல்ஜப்பாரின் கல்குவாரியால் முதலாவதாக அப்பகுதியில் சுற்றுசூழல் மாசு ஏற்படாது என்றும், அந்த இடத்தால் எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் கூறுகிறேன். இரண்டாவதாக இந்த கல்குவாரி அமையும் போது பொது மக்களுக்கு வேலைவாய்ப்பு நேரடியாக 100 ஆகவும் மறைமுகமாக சுமார் 500 ஆகவும் அதிகரிக்கும். அதன் பின் இப்பகுதியில் உள்ள 18 கிராமங்கள் பல்வேறு வகையில் பயனடையும். இந்த தொழிலின் மூலம் இந்த சமூகத்தின் வளர்ச்சிக்காக பாடுபடக்கூடியவர் இந்த தொழிலின் மூலம் வளர்ச்சிக்காக பாடுபடக்கூடியவர் வடசித்தூர், குருநெல்லிபாளையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 18 கிராமங்களுக்கு அவரால் நிறைய செய்யமுடிகிறது. எனவே, இந்தப் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களின் சமூகக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அவரால்

பங்களிக்கமுடியும். எனவே, அரசுக்கு நேரடியாக வருமானம் செல்வதைவிட, நேரடியாக மக்களுக்குச் செல்கிறது. இப்பகுதியில் தொழிற்சாலைகள் இல்லாத சூழ்நிலையில், இயற்கை வளமான இந்த கனிம வளத்தில் முதலீடு செய்து, தொழிலாக நடத்தி வருகிறார். வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் மற்றும் பொதுமக்களுக்கு பொருளாதார நிலை மேம்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்ற காரணத்தினால் இந்த கல் குவாரிக்கு அனுமதி வழக்கலாம் என்பதை தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**14. தங்கராஜ் தலைவர், மன்றாம்பாளையம்.**

அனைவருக்கும் வணக்கம். இந்த கல் குவாரிக்கு அனுமதி கொடுப்பதால் மன்றாம்பாளையத்திலிருந்து சுமார் 15 குடும்பங்கள் இங்கு வேலை செய்வார்கள். மேலும் மன்றாம்பாளையம் பஞ்சாயத்திற்கு என்ன தேவை என்று சொன்னனாலும் உடனடியாக வந்து அதை நிறைவேற்றிக் கொடுத்து நல்ல முறையில் செய்து வருகிறார். எனவே, கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**15. விஜயசங்கர், தலைவர், குருநெல்லிபாளையம்.**

வணக்கம் இந்த குவாரி எங்கள் கிராமத்தில் உள்ளது. இந்த குவாரி செயல்படுவதால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. மேலும், இந்த குவாரி இயங்கிவருவதால், எங்கள் பஞ்சாயத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் எங்கள் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு

கிடைக்கும். எனவே இந்த குவாரியை தொடர்ந்து நடத்த எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**16. தேவராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், வடசித்தூர்.**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம், அரசு மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மற்றும் கோயில் பொறுப்புகளிலும் இருந்து வருகிறேன். திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் இந்த தொழில்செய்து கொண்டு இருப்பதினால் அவருக்கு கிடைக்கும் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து சுற்றுப்புற கிராமங்களுக்கு நிறைய செய்து உள்ளார். மேலும், அரசு மேல்நிலைப்பள்ளியில் தேவையான குடிநீர் கட்டிடம், பைப்லைன் பழுது நீக்குதல் ஆகிய பணிகளை கடந்த ஆண்டு சுமார் 5 லட்சம் ரூபாய் மதிப்பில் செய்துள்ளார். சுமார் 13 லட்சம் செலவில் பள்ளமான பகுதிகளை மேடாக்கி வடசித்தூர் கிராமத்தின் 30 ஆண்டு கால கனவான அரசு ஆரம்பசுகாதார நிலையத்தை அமைத்துள்ளார். அதேபோல நானும் கோவில் நிர்வாகி. எங்கள் பகுதியில் பழமை வாய்ந்த கரிவரதராஜ பெருமாள் கோவில் கும்பாபிஷேகத்திற்காக 2 லட்சம் நன்கொடை அளித்தார். பழமையான கோவில் என்பதால், ரோடு இல்லாமல் பள்ளத்தில் இருந்தது. சாலையை சீரமைத்து, அதை சீரமைக்க தனது சொந்த நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்கியுள்ளார். மேலும், கொரோனா காலத்தில் இங்குள்ள வறண்ட விவசாயப்பகுதிகளில் வேலை செய்பவர்களுக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பல உதவிகளைச் செய்துள்ளார். மேலும் செய்வார். எனவே,

அவரது கல்குவாரி அமைக்க அனுமதி வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**17. ராசு, மொட்டைக்காடு, குருநெல்லிபாளையம்.**

நான் மொட்டைக்காடு ராசு, குருநெல்லிபாளையம். குவாரிக்கு அடுத்தகாடு என்னுடையது தான். இங்கு எந்த பிரச்னையும் இல்லை. அனுமதி வழங்கலாம்.

**18. இளங்கோ, பேக்கரி உரிமையாளர், வடசித்தூர்.**

என் பெயர் இளங்கோ. எங்களிடம் ஒரு பேக்கரி மற்றும் இனிப்பு கடை உள்ளது. கிட்டத்தட்ட 40 வருடங்களாக எனக்கு தொடர்பு உள்ளது, இங்கு கல் குவாரிகள் நீண்ட காலமாக நடந்து வருகிறது. கல் குவாரி என்பது பலருக்கு வேலை அளிக்கிறது. மேலும் ஆற்று மணல் கிடைக்காததால் குவாரி மணலை நம்பி வீடு கட்டுகின்றனர். எனவே குவாரிகள் தேவை. கிரசர் மணலும் இல்லையென்றால் பல கொத்தனார்கள், சித்தாள்கள் வேலை இழக்கின்றனர். எனவே குவாரிகள் அவசியம். சட்டத்திற்குட்பட்டு செயல்பட அனுமதி அளிக்கலாம். எங்கள் மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

**19. சரவணசெல்வன், குமரன் கன்ஸ்ட்ரக்சன், மலுமிச்சம்பட்டி.**

நான் அரசு சாலைகளின் குத்தகைதாரர். இப்பகுதியில், சாலை அமைக்க தேவையான கட்டுமான பொருட்கள், ஜல்லி, எம்–சாண்ட, wet mix போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே தூரத்தில் இருந்து கொண்டு வரவேண்டும். இவை அருகில் கிடைத்தால் மிகவும் வசதியாக இருக்கும். தொலை

தூரத்தில் இருந்து கொண்டு வரப்படுவதால், விலை அதிகம். சாலை ஒப்பந்ததாரர் மற்றும் அனைவருக்கும் மிகவும் உதவியாக இருக்கும். எனவே அதிகாரிகள் இந்த குவாரி செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மிக்க நன்றி.

**20. தம்பிராஜன்.**

அனைவருக்கும் வணக்கம் வடசித்தூர் திமுக முதன்மை கழக செயலாளராக பணிபுரிகிறேன். இன்று எங்கள் ஊர் மட்டுமல்ல 10 ஊராட்சிகளிலும் மற்றும் அருகிலுள்ள ஊராட்சிகளிலும் திரு.அப்துல் ஜப்பாரின் M-Sand ஆகியவை விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் எங்களுக்கு குவாரி தேவை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்த கல் குவாரிக்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**21. அமர்ஜித்குமார், பீகார்.**

இங்கு 10 பேர் வேலை செய்கிறோம். கல் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**22. ரஷீத், வடசித்தூர்.**

இங்குள்ள அனைவருக்கும் வணக்கம். நாங்கள் 10–15 ஓட்டுநர்கள். கல் குவாரியில் வேலை செய்கிறோம். அனுமதி அளித்தால் எங்கள் வாழ்வாதாரம் மேம்படும்.

ஆகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் எங்களுக்கு குவாரி தேவை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்த கல் குவாரிக்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**21. அமர்ஜித்குமார், பீகார்.**

இங்கு 10 பேர் வேலை செய்கிறோம். கல் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**22. ரஷீத், வடசித்தூர்.**

இங்குள்ள அனைவருக்கும் வணக்கம். நாங்கள் 10–15 ஓட்டுநர்கள். கல் குவாரியில் வேலை செய்கிறோம். அனுமதி அளித்தால் எங்கள் வாழ்வாதாரம் மேம்படும்.

**23. விஜய், தேகாணி.**

என் பெயர் விஜய்.. நாங்கள் இங்கு தேகாணியில் வசிக்கிறோம். கல் குவாரியில் ஆபரேட்டராக பணிபுரிகிறோம். கிட்டத்தட்ட 8 வருடங்களாக இங்கு வேலை செய்து வருகிறோம். நீங்கள் அனுமதி அளித்தால் எங்கள் அனைவருக்கும் மிகவும் உதவியாக இருக்கும்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நன்றியுரை நிகழ்த்தினார்.

பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது,

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுக்களின் எண்ணிக்கை : 6

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு.**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்,**
**நிலம் எடுப்பு மற்றும் மேலாண்மை அலகு**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**